அன்பே

# தெய்வீக சித்தமார்க்கம்

சித்த சாஸ்திர சித்தாந்த திங்களிதழ்

சிவம்

கர வருடம் - 1 ஜுலை மாதம் 2011 ஆடிமாதம் - 1

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | காலாங்கிநாதர் துதி | --- | 2 |
| 2. | இறவா நெறி | --- | 3 |
| 3. | போகர் ஏழாயிரத்தில் முப்பூ | --- | 12 |
| 4. | காடி திராவகம் | --- | 23 |
| 5. | வள்ளலார் அருளிய மருத்துவம் ஓர் திறனாய்வு | --- | 34 |
| 6. | அண்டக்கல்லும் ஆர்கானங்களும் | --- | 37 |


### அறிவிப்பு

தெய்வீக சித்தமார்க்கம் திங்களிதழில் வெளிவரும் கட்டுரைகள் மற்றும் கருத்துக்கள் அவற்றை எழுதிய ஆசிரியரையே சாரும் கருத்தை ஏற்பதையோ, மறுப்பதையோ வாசகர்களின் சிந்தனைக்கே விட்டு விடுகிறோம். கட்டுரைகள், கவிதைகள், மற்றும் செய்திகளைச் சுருக்கவோ, திருத்தவோ, நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன் - குறள்





## காலாங்கி நாதர் துதி

அன்பன்
அ.இராகவன்

காலாங்கி நாதனே கால் கடுத்தேன் உந்தன்
கருணை பெற துதிப் பாடினேன்
காலங் கடந்தாலும் காத்து நிற்ப்பாய் என்று
அருணை யொளி யோடு வந்தேன்
நாலொன்று வீணாக போனதே முன்னாலே
நமனுமோர் அடியை வைத்தான்
நான் என்று காயத்தை கல்பத்தில் கட்டுண்டு
கணலாகி அடியை சேர்வேன்?
பாலென்றும் அமுதமா கனியென்றும் சுட்ட ஓர்
பழம் நல்க மாட்டீர்களோ !
பாட்டோடு பக்குவம் போத விலையோ என்ன?
பகட்டோடு அறியாதவன்
ஆலோலம் பாடியக் குற மகள் மணவாளன்
சரவணப் பெருமாளிடம்
காலாங்கி நாதனே நீக் கொஞ்சம் சொல்வாயே
சிவகெதியை அடைவதற்க்கே !

# இறவா நெறி

அன்பன்
அ.இராகவன்

இறைவன் நம்மை தம்மோடு சேர்த்துக்கொள்ள சித்தமாய் இருக்கும்போது. அதற்க்கு நாம் தயாராக வேண்டாமா ! அதற்க்காக சித்த பெருமக்கள் வகுத்த பாதையை நாம் மறக்கலாமா. இது ஏன் மறந்தது ? அல்லது மறைக்கப் பட்டது ? அல்லது மறுக்கப்படுகிறது.

குருமுகாந்திரமாகவே அதை அடைய வேண்டும் என்ற பாரம்பரிய பழக்கவழக்கங்களை கடை பிடித்து நன்நெறி மாணாக்கனுக்காக நாம் நம்மை தயார் படுத்திக்கொள்ள வேண்டிய கடமை மாணவனுக்கு உண்டு என்பதை நன்நெறி மாணவனுக்கு மறந்து விட்டதா என்ன ?

உலகத்தில் படைக்கப்பட்ட பொருள்களில் நாத விந்து கலப்பில்லாத பொருட்களே இல்லை எனலாம். ஆனால் அந்த வகையான நாதவிந்து பொருட்கள் மனிதனுக்கு போது மானதாக இல்லை. நமக்கு போதுமான அளவுக்கு உள்ள பொருளை தேடுங்கள் அந்த வகையான பொருட்கள் தான் நமது ஜீவனுக்கு உயிர்ப்பை தரக்கூடிய பிரணவப் பொருளாக ஒவ்வொரு பொருளிலும் உள்ளது. அது எது... எந்த அளவில் உள்ளது. என்னப் பொருளாக உள்ளது... என்ன வகையான சத்துக்களாக உள்ளது...?

அது தான் படைப்பின் இரகசியமாக இருக்கிறது அந்த இரகசியத்தையும் அதில் உள்ள சத்துக்களையும் தான் சித்தர்கள்

நாத விந்து என்றார்கள். நாத விந்து என்பது கிரசம், கெந்தகம், காரம் சாரம், உப்பு புளி என்பதுப்போல் எல்லாமாகவும் இருப்பதை கண்டார்கள் ஒருப் பொருளின் ஜீவ வித்துவைத்தான் நாம் நாத விந்து என்கிறோம் அது தான் நம் ஜீவனுக்கு தேவையான வற்றை





வைத்துள்ளது அதன் வடிவம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம் அதன் உயிர்ப்பு நமக்கு தேவையான அளவுக்கு உள்ளதால் அது தான் நமது பிரணவப் பொருள் மற்றும் பல பொருட்களுக்கு இறைவனோடு இறண்டற கலப்புற நமக்கு தேவையான ஆற்றல் கொடுக்கும் வல்லமை அவைகளுக்கு இல்லை ஆனால் அது நமக்கு தேவையான அளவுக்கு உள்ள பொருளும் நம் பூமியில் காணக்கிடக்கின்றது. அவைகளை கண்டெடுத்து நாத விந்துகளை முறைப்படி பிரித்து பின் சேர்க்க அறிந்து சேர்க்கறிந்த பொருளை முப்பூவாக முடிக்க சேர்க்கறிந்தால் அதை உட்கொண்டு பிறவிப் பெருங்கடலை கடக்க உதவும் உத்தம பணிகளில் நம்மை நாம் ஏன் தயார் செய்துக்கொள்ளக் கூடாது ?

நமது நோக்கம் அதுவாயின் அதற்க்காக உழைப்பதில் என்ன தவறு உள்ளது? தேடவேண்டிய பொருளை தேடுங்கள் எடுக்க வேண்டிய பொருளை எடுத்து, பிரிக்க வேண்டிய பொருளை பிரித்து. பின் கூட்டவேண்டிய பொருளை கூட்டி அனுபவம் வாய்ந்த மெய் குருமார்கள் வழியாக உட்கொள்ள வேண்டிய காலக்கட்த்தில் மருந்தை உட்கொண்டு முறைப்படி செய்ய வேண்டிய பயிற்ச்சியை முறையாக செய்து வந்தால் தான் நாம் அடைய வேண்டிய இடத்தை எளிதாக அடைய முடியும். இல்லையேல் மரணபயம் கொண்டு திரிய வேண்டியது தான் மரணபயம் விரக்தி ஆகும்போது தான் செய்யக்கூடாத தவறுகளை செய்ய நேர்கிறது மரண பயம் என்றால் என்ன ?

எந்த நேரத்தில் எது நடக்குமோ என்ற பயம் உடல்கெட பயம வரும், நடக்க பயம் வரும், நிற்க்கையில் எது நம்மை எந்த இடத்தில் தாக்குமோ என்ற பயம் வரும் இது கூடமன நோயாக மாறும்போது அவனை திருத்த படாதபாடு படவேண்டி இருக்கும் அதுவே விரக்தியாக மாறும்போது எதிர்க்க துணிந்து விடுகிறான்

எண்ணித்துணிக கருமம் துணிந்தப்பின்
எண்ணுவம் என்பது இழுக்கு
குறள் - 467 (அ) 47

அந்த துணிவு தக்க துணைக்கொண்டதாக இருந்தால் அதுவே அவன் பூர்வ ஜென்ம புண்ணியம் ஆகும்.

குருபிரான் தான் அந்த தக்கக் துணைவன் ஆகும் இறைவா நெறிக்குள் உள்ள அது சூச்சமம் யாவும் அவர்களுக்கே வெளிச்சம். தக்க குருவின் துணையோடு உன் பயணத்தை துவங்கு... இறை நெறி அவர்களுக்குத்தான் அத்துப்படி அப்படிபட்ட குருவை அடைந்து அவர்களின் வழி நடத்தலின் படி நாம் நம் பயணத்தை துவங்கினோமானால் இறைவா நெறியை நாம் அடைந்து விடமுடியும்.

அதற்குண்டான வழியை தான் போகப்ருெமான் தனது 7000தில் கூறியுள்ளார். அந்த நெறியின் விதிப்படி அந்நூலில் உள்ள சில பாடல்களுக்கு உரையாக எழுத நேர்ந்தது.

## மரணம் என்றால் என்ன ?

மரணத்தைப்பற்றி தெளிவாக கூற வேண்டுமானால் ஒன்று நான் செத்துப்பிழைத்தவனாக இருக்கவேண்டும். அப்பொழுது தான் அதைப் பற்றி தெளிவாக பேச முடியும். நம்மில் யார் செத்துப் பிழைத்தவர்கள்? ஒருமுறை அடியேன் ஒரு மருந்தை செய்துக்கொண்டிருந்தேன் வேலூரை சேர்ந்த நண்பர் பரசுராமன் அவர்கள் கேட்டதிற்கு கிணங்க அடியேன் கண்டறிந்த ஆய்வின்





முடிவின்படி ஒரு மருந்தை செய்துக் கொண்டிருந்னே். அப்பொழுது அதில் இருந்து எழுந்த நெடியின் காரணமாக முதலில் மயக்கம் வந்நது. அந்த மயக்கத்தை சுதாகரித்துக்கொண்டு மீண்டும் மருந்தை செய்தேன். என் மனைவி குழந்தையை தூக்கிக்கொண்டு வெளியே சென்று விட்டார். பரசுராமனும் நெடி தாளாமல் வெளியே சென்று விட்டார்.

அடியேன் மட்டும் நெடியை பொருத்க்கொண்டு மருந்து செய் முறையில் ஈடுப்பட்டுக்கொண்டிருந்தேன் உச்சந்தலையில் சுளீர் என்ற ஓர் மின்னல் நெஞ்சடைத்தது மல ஜலம் வெளியே தள்ள ஆரம்பித்தது அந்த நிலையிலும் எழுந்து தட்டுதடுமாறி பாத்ரூம் சென்று திரும்பியவன் கீழே விழுந்தேன். அது மட்டும் எனக்கு சுய நினைவு இருந்தது மெல்ல மெல்ல என் நினைவுகள் கறைந்து “நான்” அங்கு வெறுமையானேன் எனக்குள் எதுவும் இல்லை... அதன்பிறகு நடந்தவற்றை சொல்ல கேள்விபட்ட விஷயம். அடியேனின் நடந்தவற்றை சொல்ல கேள்விபட்ட விஷயம் அடியேனின் மனைவி என்னை பார்த்துவிட்டு கத்தி கூட்பாடு போட்டு ஊராரை அக்கம்பக்கத்தவர்களை அழைந்து ஆட்டோவில் அடியேனை தூக்கிக்கொண்டு செல்லுமுன் ஒரு நண்பர் மூலம் அவசர சிகிச்சை செய்து அனுப்பப்பட்டேன் எந்த மருந்துவமனைக்கு அழைத்துச் சென்றாலும் வேண்டாம், முடியாது டாக்டர். இல்லை என்று அனுப்பட்டதாகவும் சேலம், தாதகாப்பட்டியில் ஒரு டாக்டர். எழுதிகொடுத்து சேலம் சீலநாயக்கன்பட்டியில் மருத்துவமனையிக்கு கொண்டு சென்று ICU வில் மூன்று நாட்கள் சிகிச்சை அளித்த இரவு தான் சுய நினைவு திரும்பியது அது வரை என்ன நடந்தது என்பது

அறியாத நிலை ஆனால் இடையில் என்னோடு நானே தொடர்ந்து செல்வதுப் போலவும் கணவு காண்பதுபோல் இருந்தது. இயக்கமற்ற அடியேனின் உடலை தூக்கிச் செல்லும்போது நானே அவர்களுடன் செல்வதுப்போல் ஓர் உணர்வு நிலை என்பது குறிப்பிடத்தக்கது. அடியேனின் உடலுக்கு மற்றவர்கள் சிகிச்சை செய்வதுக்கூட கனவு காண்பதும் போன்ற ஓர் நினைவு உள் உணர்வுக்குள் இருந்தது. இது இரண்டாம் நிலை முதல்நிலை என்பது.

உறங்குவது போல் சாக்காடு உறங்கி
விழிப்பதுப்போல் பிறப்பு என்ற திருவள்ளுவரின் வாக்குக்கு
ஏற்றால்போல்

இது தான் இறப்புக்குண்டான நிலையா ? அடியேன் அறியேன், ஆனால் இது மரணத்தின் நிலை என்றால். என்னை சுமந்துக்கொண்டு அடியேன் நடந்தது எப்படி ? உள் உணர்வு நிலைகள் இயங்குறிது என் உடல் மட்டும் செயல் இழந்து பிணம் போல் இருந்தது.

### மரணத்திற்க்கு அப்பால்

அந்த உணர்வு நிலைகளின் இயக்கமே மரணத்திற்க்கு பின் நடக்கம் செயல்பாடுகள். இதை தான் ஆத்ம சாந்தி சிரார்த்தம். திதிக் கொடுப்பது என்ற பெயரில் நாம் சம்பிரதாயமாக வைத்துள்ளோமோ ...?

அந்த திதிநாளுக்குப்பின் அந்த உணர்வு நிலைகள் ஒடுங்குதற்க்குண்டான நிலைகளைத்தான் நாம் சமாதி என்கிறோமா பயிற்ச்சி பெற்ற சமாதியோகம். மீண்டும் எழுந்து வந்துவிடும். சுய





ஜீவ விழிப்புக்கு பின் சித்து நிலை அறிந்தவரானால் தசவித நாடியில் ஒடுங்கி உள்ள ஜீவனை வெளியே கொண்டு வந்து சித்துக்களை பயன்படுத்தி சமாதியை விட்டு வெளியே வரும் மகான்களும் உண்டு. அந்த ஆனந்த நிலையை விட்டு விருப்பம் இல்லாதவர்கள் தக்க சூழலுக்கு ஏற்ப நடந்துக்கொள்கிறார்கள்.

மீண்டும் அவர்கள் சித்து நிலையை பயன்படுத்தி வெளியே வர வேண்டுமானால் உடல் கெடாமல் கல்பதேகியால் தான் முடியும் மற்றவர்களால் முடியாது. அதனால் முதலில் காய சுத்தி. அதற்க்குபின் காய கல்பம். அதன்பின் காய சித்தி என்பதை மகான்கள் நடைமுறை படுத்தி இருக்கிறார்கள். அதற்க்கு தக்க குருமார்களின் அனுபவ நடைமுறையும். இன்னது தான் கல்பமருந்து என்றும் இன்னது தான் முப்பூ என்பதும் நம் சந்தேகமற அறிந்துக்கொண்டால் தான் இப்படிபட்ட உன்னத நிலையை அடைய முடியும் இல்லையேன் ஜீவன் பக்தர்களின் நாம ஜெபத்திலும் பித்ருலோகத்தையும் அடைந்து நமது வினைப் பயனுக்கு ஏற்ப இன்னொரு பிறவியோ, அல்லது முக்தியோ அல்லது சமாதியோ அல்லது மோட்சத்தையோ அடைய முடியும் மோட்ச சாதனைத்தையும் ஜீவன் முக்தியும் சித்தர்களின் சமாதி நிலையும் சொரூபசித்தியும் அடைய முடியும்.

### சாமதி வைத்தல்

சமாதி வைத்தலில் பல வகை உண்டு. அவைகளில் நடு சமணமான தரையில் இருந்து தொட்டிப் போல் கட்டி அதில் அமர்ந்து தன் ஜுவனை ஒடுக்கிக் கொள்ளுதல் என்பது ஒரு வகை ............

தரையிலிருந்து குழி வெட்டி குழியை தோசம் போக்கி மஞ்சள் விபூதி. வில்வம். துளசி விபூதி ம்ற்றும் பல வாசனை திரவியங்களும் போட்டு குழியை பக்குவப்படுத்தி அதன் பின் சமாதி வைக்கும் காலத்திற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே இப்படி குழியை

ஏற்பாடு செய்துக் கொண்டு ஜுவனை தசவித நாடியில் ஒரு நாடியில் ஒடுக்க வேண்டிய கலை கட்டத்தில் ஜுவனை ஒடுக்கிக் கொள்கிறார்கள். நாடி நடை இருக்காது. உணர்வுகள் இருக்காது. கையை தூக்கினால் சொத்தென்று விழும் ....... ஆனால் அந்த உடல் பிணமல்ல ....... ஒடுக்கம் ஜுவன் ஒடுக்கம் ...... இரத்த ஓட்டம் இருக்கும். ஊசி எடுத்து குத்தினால் உணர்வு தெரியாது. ஆனால் வாசியை நாடியில் காண முற்படுதல் கூடாது .... நாடி .... உடல் .... இவைகள் வர்மப் புள்ளிகளால் இணைக்கப்பட்டது .... இந்நிலை அடைந்தவர்களை பெரும்பாலும் யாரும் தொடக்கூடாது. நாடியின் வர்மப் புள்ளியில் அழுத்தம் ஏற்பட்டால் அதன் எதிர் விளைவுகள் படுமோசமானதாகவும் இருக்கலாம். இப்படிப்பட்ட நிலையில் நாம் நிதானமாக எந்த நாடியிலும் அழுத்தம் ஏற்படாத வண்ணம் தொடுதல் தூக்குதல் போன்றவற்றை செய்ய வேண்டும். இதில் ஜீவன் முக்தி அடையும் அன்பர்களை நீங்கள் குளிப்பாட்டலாம். அபிசேகம் செய்யலாம் அதில் தவறில்லை. ஏனெனில் அந்த உடலில் இருந்து ஜீவன் குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு பிரிந்து இறையோடு இறையாக கலந்து விடும்.

இது முன்னயே நடத்தியவர்களுக்கும்.

பின் மூன்று மாதம் கழித்து ஜீவனை பிரிப்பதற்கும் வித்தியாசம் உள்ளது.

முன்னயே ஜீவனை பிரித்துக் கொண்டு செல்பவர்கள் அவர்கள் தன் வாயால் சொல்லுவார்... இந்த நேரத்தில் இந்த வினாடியில் என் ஜீவன் பிரியும். நீங்கள் பின் என்னை சமாதி வைத்து விடுங்கள் என்று சொல்லி விடுவார்.

இது காய கல்ப உடம்பாக இருக்கத் தேவையில்லை ... யோக





பயிற்சியும் .... சிற்சில மருந்து முறைகளுமே போதுமானது.

சமாதி வைக்கும் நேரம் வந்ததும் .... மகான் .... குழிக்குள் இறங்கி ஜெபமாலையை உருட்ட தொடங்குவார் ... சில நிமிடத்துளிகளில் ஜெபமாலை உருள்வது நிற்கும் ... நாடிப்பார்ப்பவர்கள் அல்லது வேறு என்ன நிகழ்ந்தது என்பதனை அறிந்து அவர் சொன்னப்படி உப்பு, துளசி, வில்வம், வேப்பில்லை, திறுநீறு இவைகளை கலந்த கலவையை கழந்து வரை கொட்டி மேலே பலவகை கல் கொண்டு மூடி விடுவார்கள். காய கல்ப உடம்பினருக்கு உடல் இறுகி உச்சி கட்டி இருப்பவர்களுக்கு (உச்சி பாறைப்போல் இறுகி உள்ளவர்களுக்கு) உச்சி வெடித்து ஜீவன் வெளியேறும். அப்படி வெளியேறும் காலத்தில் அது ஜோதி ரூபமாகத் தெரியும். அதை பார்த்தவர்களும் உண்டு. அது வரை உடல் தாங்க வேண்டாமா ... கல்ப தேதிக்கு உடலில் கசிவு இருக்காது. கட்டைப் போல் கட்டி இருக்கும். (இப்படிப்பட்டவர்கள் தான் சென்ற இதழில் அடியேன் எழுதிய அயச்செம்பு கல்பம் 16 என்ற முறையில் செய்த கல்ப மருந்து போன்றவற்றை உண்டு, உடலை பக்குவப்படுத்தி வைத்திருப்பார்கள். அழுகிய வாழைப்பழத்தில் கொஞ்சம் மருந்து வைத்தால் அந்த அழுகிய வாழை எப்படி கெடாமல், வாடை வராமல் கல் போல் இறுகிப் போகிறதோ ... அப்படி உடல் இறுகி கல்ப தேகமாகும். ... இதுவே ஒரு கல்ப தேகியின் இலச்சணமாகும்.

இதுவே கல்பம் செய்யாமல் பயிற்சி மட்டும் செய்யும் பயிற்சியாளருக்கு மேற்கண்ட நிலைகள் படி அமைவதில்லை. மூன்று, நான்கு, நாளுக்கு மேல் உடல் கெட ஆரம்பித்து விடும். அவர்களையும் மேற்கண்ட முறைப்படி சமாதி வைத்து விட்டால் சில நாளில் உடலில் இருந்து கசிவு ஏற்ப்பட்டு ஊண், கொழுப்பு,

நிணநீர் யாவும் வெளியேர ஆரம்பிக்கும். ஜீவனும் உடனே பிரிந்து விடும். இவர்களுக்கு உச்சி ஊரி குழந்தையின் உச்சியைப் போல் தொட்டால் பள்ளம் விழும். இவர்களுக்கு தான் உப்பு, விபூதி, வில்வம், வேப்பிலை, துளசி இவைகளை அதிகமாக சேர்த்துக் கொள்வார்கள். இவர்கள் உடல் என்ற சட்டையை கழற்றி விட்டு இறைவனின் திருவடியை அடையக் கூடியவர்கள். இவையெல்லாம் அல்லாமல் இறைவனை சென்றடையக் கூடிய வழி முறைகளும் உண்டு. அவை தாம் சமாதி அடையும் நேரம் வந்து விட்டது என்று கூறி அதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்து விட்டு குறிப்பிட்ட நேரம் வந்ததும் சமாதியில் அமர்ந்து மறைவு மையிட்டு மறைந்து பின் எழுந்து வேறு தேசத்துக்கு சென்ற மகான்களும் உண்டு... அதற்க்கு உதாரணம் ஒரே சித்தரின் சமாதி பல்வேறு இடங்களில் இருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

மறைவு மை இல்லாமல் சொரூப சித்தி அடைந்த மகான்களும் உண்டு.

ஒரு பெரியவர்... சொரூப சித்திக்கு உண்டான பயிற்சியும் மருந்தையும் உட்கொண்டு வாழ்ந்து வந்தார். ஒரு கட்டத்தில் அவரது நிலை குழந்தைத்தனமாக மாறியது... குழந்தைகளைப் போல் ஓட வேண்டியது... மிட்டாய்களை அல்லி குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டியது... கொண்டாடமாக குறித்து ஆடவேண்டியது... இப்படி இருக்க... எங்கிருந்து வந்தாரோ அங்கேயே (அவருடைய சொந்த ஊர்) கொண்டு சென்று விட்டு அங்குள்ள கடைகளிடம். இவர் எதை சேதப்படுத்தினாலும் அதற்குண்டான பணத்தை நாங்கள் கொடுத்து விடுகிறோம் அவரை தடுக்காதீர்கள்... அவர் பெரிய மகான் என்று அங்கு உள்ளவர்களிடம் சொல்லிவிட்டு அவரையும் அங்கேயே விட்டு விட்டு சென்று விட்டார்கள் அந்த பெரியவரோ... எங்கும் செல்வார் எதையும்





எடுப்பார்... குழந்தைகளுக்கு கொடுப்பார்... இப்படியே காலம் போனது... கொஞ்ச காலத்தில் சொந்த ஊருக்க கொண்டு வந்து விட்டு நண்பர்கள். பெரியவரை பார்க்க வந்தார்கள்... ஆனால் அவர் குரல் மட்டும் கேட்டது.. அங்குள்ளவர்களை விசாரித்தில் கொஞ்ச நாள் இங்கே தான் இருந்தார் பறிகாலத்தில் அவரை காணமுடியவில்லை இங்கே தான் இருந்தார் பிற்காலத்தில் அவரை காணமுடியவில்லை என்றார்.

அவர் குரல் வந்த திசையை நோக்கி பேச்சுக்கொடுக்க அவர் முன் தோன்றி பேசிதாக... இந்த விஷயத்தை சொன்ன நன்பர் என்னிடம் கூறினார்.

இது தான் சொரூப சித்தியின் நிலையோ...?

அவருடைய ஊர் பெயர் இக்கதையை சொன்னவர் பெயர் கூட யாருக்கும் தெரியக்கூடாது என்று சொல்லி இருப்பதனால் அவர்களின் பெயர் இங்கு எழுதவில்லை. இப்படி சமாதி வைத்தல் சொரூப சித்தி போன்ற விஷயங்கள் யாவும் உண்மையே. இந்த உண்மையைகுக்கு சொல்லி இப்பாதையை வேண்டும் என்பதே இங்கு இக்கட்டுரை எழுத நேர்ந்தது. இதற்க்கு போகர் ஏழாயிரத்தில் கூறப்பட்ட மருந்தும் பயன்படலாம் என்பதே அடியேனின் கருத்தாகும்

## போகர் ஏழயிரத்தில் முப்பூ

**மூலமும் – உரையும்**
**அன்பன்**
**அ.இராகவன்**

**காப்புச்செய்யுள்**

ஆனந்தமாய் நிறைந்த ஆதிபாதம்
அண்ட பரிபூரணமா மையர்பாதம்
வானந்தமாகி நின்ற கணேசன்பாதம்
மருவியதோர் மூலத்தில் நந்திப்பாதம்
தானந்த மாகியதோர் காலாங்கி பாதம்

சனகருட வியாக்கிரமர் பதஞ்சலியின்பாதம்
போனந்தமாகியதோர் ரிஷிகள் பாதம்
போற்றி ஏழாயிரம் நூல் புகலுவேனே

ஆதிநாதம் பாதம் விந்து இது அகண்ட ரிபூரணமாகும் ஆனந்தம் நிறைந்தது. வானிலிருந்து பெறப்படும் அந்தமாகி நின்ற கணேசன்பாதம், ஆதியாய் தோன்றி வானந்தமாகி நின்று மருவி அது மூலமான மெய்ப்பொருளாகிய நந்திப் பாதம், தான் அந்தமான விந்து மயமான காலாங்கி பாதம், சன, கருட வியாக்கிரமர், பதஞ்சலியின் பாதம். போன, அந்தமான விந்து மயமான ரிஷிகள் பாதம் மேற்கண்ட குருமார்களின் திருப்பாதங்களை தொட்டு வணங்கி இந்த ஏழாயிரம் என்ற இந்த நூலை சொல்கிறேன்.

**பி.கு.** சன் என்பது மெய்ப்பொருள், கருட என்பது பிரம்மக்கல், இது எங்கும் வியாக்கிரமித்து இருக்கிறது. இதை அறிவிக்கும் போகரின் பாதங்களை வணங்கி இந்நூலை துவங்குகின்றேன்.

வரையான யுன்ன மொரு மார்க்கம் சொல்வேன்
வளமையுள்ள புலிப்பாணி இந்திர கோபுர
திரைமறைவு நேராமல் முப்பூ மார்க்கம்
செப்புகின்றேனுந்தனுந்மெக்கு புனிதவானே
முறையான வழிபாடு முன்னந்தம்
முனையான சுருக்கமது யிதிலடக்கம்
குறையாது சிடிகை என்ற வேதையப்பா
குவலயத்தில் சித்து முனி சொல்லார் தானே

வளமையுள்ள புலிப்பாணியே இதுவரை திரைமறைவாய் உள்ள இந்திரகோபம் என்ற முப்பூ மார்க்கத்தை உனக்காக சொல்லுகிறேன். புனிதவானே முன்பு சொன்ன அந்தத்தை கேள் அது உன்னை முறையாக வழிப்படுத்தும் முனையுள்ள உப்பின் சுருக்கம் இதில் அடங்கிவிட்டது இந்த உப்பு இருந்தால் தான் முறையான சிடிகை வேதை குறைவிலாது பூரணமாகும் இதை இக் குவலயத்தில் உள்ள சித்து முனிகள் கூட சொல்லார்கள்.





**பி.கு.** இங்கு பாடலின் நான்கவாது வரி நூலில் உள்ளப்படி கொடுக்கப்பட்டுள்ளது. அவை செப்புகின்றேனுந்தனுக்கு புனிதவானே என்று தான் வரவேண்டும். இங்கு அச்ச பிழை காரணமாக அந்த வரிப் புரியவில்லை. ஐந்தாவது வரியிலும் சீர் கெடுகிறது ஏதோ ஒரு சொல் விடுப்பப்படுகிறது. அது என்ன சொல் என்று தெரியவில்லை.

தானான மனோன் மணியாள் கிருபையாலும்
தாக்கமான காலாங்கி கடாட்சத்தாலும்
தேனான முப்பூவின் வளமை தன்னை
தேறற்முடன் வெளியாங்கமாகச்சொல்வேன்
பானான முப்பூவை யெடுக்க மார்க்கம்
பாலகனே முறைப்பாடு வழிபாடாகும்
மானான பங்குனியாம் பருவந் தன்னில்
மார்க்கமுடன் காவாசை பருவந்தானே

என்தாய் மனோன்மணியவள் கிருபையாலும்
காலாங்கி நாதரின் கடாட்சத்தாலும் முப்பூவின் வளமையை வெளியாகச் சொல்லுவேன். இது தேனான நீர் பூவின் நீர் இது தான் முப்பூவை எடுக்கும் மார்க்கமாகும். பாலகனே உன்னை முறைப்படுத்தி வழி நடத்தும் மாதம் மானானப் பங்குனி பருவமாகும். ஞாபகம் வைத்துக்கொள் இது காவாசை பருவமாகும். சிலர் காவாசை என்பதற்க்க அமாவாசை என்றும் சொல்கிறார்கள்
பி.கு. : காவாசை என்பதற்கு சரியான பொருள் தெரியவில்லை. ஆனால் காவாவி என்பதற்கு திருநீற்று பச்சை என்ற பொருள் பொருத்தும் என்பதால் அன்பர்கள் இப்பொருள் படும்படியே எடுத்துக்கொள்ளவும்.

பருவமாம் வடக்க வெகு தூரம்ப்பா
பாங்கான வளர்பூமி தன்னிற்சென்று
உருவுடனே நடுச் சாமவேளை தன்னில்
உத்தமனே மனோன்மணியை மனதிலெண்ணி

குருவான பூநீரையெடுப்பதற்கு
கொற்றவனே வெடி காலத்தன்னிலப்பா
பருவமுடன் பூக்குமந்த முப்பூ தன்னை
பட்சமுடன் தானெடுத்து வறைக்கேளே

உத்தமனே, மனோன்மணித் தாயை மனதிலெண்ணி வடபுறம் குரு வளரும் பூயில் முன் சாரசாமத்தை நீக்கி, பின்சார சாமத்தையும் விட்டு, நடச் சாமச்சாரத்தை எடு ! அதுவே குருவான பூநீர் வெடிக்காரத் தன்மையோடு வளரும் பருவமொடு பூக்கும் அந்த முப்பூவை அமர பட்சமுடன் எடு மேலும் கேள்.

கேளே தான் முப்பூ என்ற பூநீர் தன்னை
கவனமுடன் பீங்கானில் பதனம் பண்ணு நாளே தான்
போகாமல் குருமுடிக்கும்
நலமாகக் கைபாகஞ்சொல் வேணப்பா
பாளே தான் போகாமல் பூநீர் தன்னை
பாங்கான நிலமதனிற் சொல்லக் கேளீர்
ஆளே தான் பூநீர்களெடுத்த பூமி
அதிலிருக்கம் மர்மத்தை அறைவேன்பாரே

கேளே தான் முப்பூ என்ற பூநீர் தன்னை
கவனமுடன் பீங்கானில் பதனம் பண்ணு நாளே தான்
போகாமல் குருமுடிக்கும்
நலமாகக் கைபாகஞ்சொல் வேணப்பா
பாளே தான் போகாமல் பூநீர் தன்னை
பாங்கான நிலமதனிற் சொல்லக் கேளீர்
ஆளே தான் பூநீர்களெடுத்த பூமி
அதிலிருக்கம் மர்மத்தை அறைவேன்பாரே.

பூநீர் தான் முப்பூ நீர் வடிவான பூதான் இங்க முப்பூவாகிறது அதை பீங்கானில் தான் பதனம் செய்யவேண்டும்.. இனி கை பாகத்தை சொல்கிறேன். நாள் கடத்தாமல் குருவை





முடிக்கவேண்டும். (பாளையை சீவி கள் இறக்குவதுப்போல்) பாலின் தன்மைம போகாமல் பூநீர் எடுத்த, பூநீர் கள் எடுத்த நிலத்தையும் அதிலிருக்கும் மர்மத்தையும் அறைகிறேன்.

**பி.கு.:** பிருதிவியான பூமியில் இருந்து இறைத்துப் பிரிக்கும் பூநீர்கள் எத்தனை வகை... அவை தான் முப்பூவாகம் அதில் உள்ள மர்மத்தை இனி சொல்கிறேன்.

பாரேதான் வோராள மட்டமாக
பான்மையுடன் குறியது தான் தோண்டும்போது
நேரே தான் பிரம்ம மென்ற கல் தானப்பா
நேர்மையுடன் தானிருக்கம் நிகலக்கேளு
நீரே தான் பிரம்மமென்ற சுக்கிரன் கல்லை
தீரமுடன் தானெடுத்து சொல்லக்கேளு
சேரேதான் கல்லதனை பதனம் பண்ணு
செயலான பாக்கியமு மனேகமுண்டே

உண்டான யின்னமொமரூர் மஞ்சொல்வேன்
உத்தமனே முப்பூவின் மார்க்கமப்பா
திண்டான கல்லூப்பு வேணமட்டும்
திரமுடனே தானெடுத்து புகலக்கேளும்
வன்மையுடன் கல்லுப்பை பதனம் பண்ண
வாகுடனே போகும் வகை வன்மை பாரீர்
வண்பாக மூன்றையுந்தான் முடிப்பதற்கு
நலமான மும்மூர்த்தி சொருபந்தானே

உத்தமனே முப்பூவை பற்றி இன்னுமொரு மர்மத்தை சொல்கிறேன். முப்பூவை முடிக்க ஒரு பொருளில் இருக்கும் மும்மூர்த்திகளின் சொரூபமான, சுத்த ஜலம், நாதம், விந்து, கல்லுப்பு போன்ற விஷயங்களை ஒன்றான பொருளிலிருந்து மூன்றான மும்மூர்த்திகளின் சொரூபத்தை தரிசித்தால் முப்பூவை முடிக்க ஏதுவாகும்.

**பி.கு. :** மூலநூலில் இப்பாடலின் முதல்வரி மேல் உள்ளப்படி தான் உள்ளது ஆனால் அது அச்சுப்பிழையாக இருக்கலாம் ஏனெனில் அதற்கு யாதொரு பொருளும் இல்லை என்றே தோன்றுகிறது. இந்த வரிக்கும் ஏதேனும் பொருள் பட உரைத்தால் அதை அல்லது உபதேசித்தால் அதை சிரமேற்க்கொண்டு ஏற்றுக்கொள்வேன். அடியேனுக்க புரிந்தவரை அந்த வரி “உண்டான இன்னுமொரு மர்மஞ்சொல்வேன்” என்று இருக்கலாம் என்பது அடியேனின் கருத்தாகும்.

தானான பழச்சாறு யென்ற மார்க்கம்
தன்மையுடன் முடிப்பதற்கு பருவஞ்சொல்வேன்
கோனான குருவை யென்ற நெல் தானப்பா
கொற்றவனே அவிக்காமல் தானெடுத்து
பானான வரிசியது படிதான் நான்கு
பாலகனே தானளந்து வரிசை பாரீர்
மானான புது பாண்டம் தண்ணில் தானும்
மார்க்க முடன் தான் சமைக்கும் வகை தான்கேளே

இன்னும் ஒரு மர்மம் சொல்வேன் என்றது வேறொன்றுமல்ல அது பழச்சாறு முடிக்கும் பாகமாகும்.

பழச்சாறு முடிப்பதற்கு பருவமுள்ள தன்மை வேண்டும் கொற்றவனே... குருவான கருணையென்ற நெல்லை சூரிய சந்திரர்கள் அவித்தெடுக்கும் முன் அதை நீ எடுத்து வந்து நான்குப்படியளவு புது பாண்டத்தில்ப் போடு இனி மார்க்கமுடன் சமைக்கும் வகையை சொல்கிறேன்.

பிருதிவியான மன்னம்சத்தை ஓராள் (மட்டும்) மட்டம் தோண்டும்போது பிரம்மக்கல் கிடைக்கும். குறியைத் தோண்டி அதிலிருந்து ஒழுகிய நாத நீரால் விளைவதே பிரம்மக்கல் ஆகும்.





இதற்க்கு சுக்கிரன்கல் என்ற பெயரும் உள்ளது அதை உருவாக்கி பதனம் செய் இதனால் அனேக பாக்கியங்கள் உண்டாகும்.

**பி.கு.** இங்க கூறப்படும் சுக்கிரன் என்ற கல் அசுர குருவாகும். அதை தேவகுருவாக மாற்றவதைப் பற்றி இங்க கூற வருகிறார். போகர் பெருமான்.

வகையான வரிசையது பொங்கியேதான்
வன்மையுடன் தானிறக்கி ஆறப்போடு
தொகையுடனே மருபாண்டந் தன்னிலிட்டு
தோறாமல் ஜலமதுவுஞ் சோடசந்தான்
முகையுடனே பாணியென்ற தண்ணீர் தன்னை
முகியாமல் தான் காய்சி கிறக்கிக்கொண்டு
வகையான சவாசி யென்ற சாந்தன்னில்
பக்குவமாய் நிலம்விட்டு மூடக்கேளே.

குருவான அரியையும் சியையும் பொங்கவைத்து அதை இறக்கி காற்றுப்பட ஆறப்போட்டு வைக்கவும். பின் அதை வேறு பாண்டத்தில் இட்டு அதில் பதினாறு கலையுடைய வாசிநீரை சேர்த்து அதை அக்னியில் காய்ச்சி இறக்கி வைக்கவும் மீண்டும் அதை வாசி என்ற சாந்து தண்ணீல் நிலம் என்ற பிருதிவியை போட்டு மூடக்கேள்.

மூடவே இரவி யென்ற வெய்யில் தன்னில்
முனையான கழை என்ற பாண்டந்தன்னை
நீடியே நாள்தோறும் அருணன் முன்னில்
நிலையான பாண்டத்தை வெய்யிலில் வைத்து
சாடி என்ற பாண்டமதில் ஜலமுந்தானும்

தாக்கான இரவியினிலே சுண்டு மட்டும்
கூடியதோர் ஜலமதனைக் காய்ச்சி மைந்தா
கொற்றவனே குறைவுக்கு விட்டிடாயே

பதினாறு கலையான வாசி நீரை பிருதிவிக்கொண்டு மூடி ரவியில் காடி என்ற பாண்டத்தை வைத்து, மாலை வரை வைத்திருந்துப் பார்க்க ஜலம் குறைந்திருந்தால் அதில் அளவீட்டில் வற்றிய ஜலத்தை சமன்படுத்தி வாசி நீரை ஊற்றி வைக்கவேண்டும்... ஊறவைக்கவேண்டும்.

**பி.கு. :** உதாரணமாக பதினாறுப்படி காடியை ரவியில் வைத்து காய்ச்ச, அதில் இரண்டுப்படி ரவியில் சுண்டி இருந்தால் மாலையில் குறைந்துப்போன இரண்டுப்படி வாசி நீரை ஊற்றி சோடசத்தை சமன்படுத்திக்கொண்டே வரவேண்டும்.

விட்டிடவே நாள்தோறும் குறையுமட்டும்
வீரான காடி யென்ற பாண்டந்தண்ணில்
கொட்டளவு வெண்ணீரை ஆறவைத்து
குறையாமல் நாள்தோறும் இப்படியே வாரு
சட்டமுடன பாண்டமதை ஆறுத்திங்கள்
சாங்கமுடன் தினந்தோறும் ரவியில் வைத்து
திட்டமுடன் ராக்காலம் பனியில் வைக்க
தீக்கமுடன் செய்குவதும் பாகம்தானே

இந்த காடியின் பகுவம் தான் என்ன ? இது எப்படி காடியானது ? இதை எங்கனம் அறிவது ? தினந்தோறும் ரவியில் காடிப் பாண்டத்தை வைக்கும் போது சீறும் நாகத்தின் விஷத்தைப் போல், காடிக்குகளும் ஏறி இருக்கும். அந்தக் காரம், அந்த காரமானது சரக்குகளுக்கெல்லாம் காலன் ஆகும். நீறாத சரக்குகள் யாவும் நீறிப்போகும் உத்தமனே யூகித்து வைத்துக் கொள், (இதுவே





காடியாகும்) இப்படி, காடி வைக்கம் வழியை சொன்னேன்.

**பி.கு.** இக்காடியை காலையில் இருந்து மாலைவரை ரவியிலும் மாலையில் பனிப் பொழிவு ஆரம்பித்ததும் பனியில் வைத்துக் எடுக்க வேண்டும். இப்படி ஆறு மாதப் காரசார நீர்வற்ற வற்ற ஊசி நீரை வாசிக்கு ஊட்ட ஊட்ட முடிவில் ஆறு மாதம் கழித்து அந்தக் காரத்தை அந்தகாரத்தைப் போல் தான் இருக்கும். அது அறிவொளிக்கு தென்படும் காலங்களில் அதன் மகாமகத்துவம் என்னவென்ற விளங்கும்.

பாகமாய் காடியென்ற் பாண்டந்தன்னை
பரிதி முன்னே தினந்தோறும் வைக்கும்போது
நாகமது சீரியதோர் விஷத்தைப்போல
நாதாந்த காடிக்க காரமேறி
வேகமுள்ள சரக்குக்கு காலனாச்சு
வேகாத சரக்கெல்லாமே வெந்து நீறும்
யூகமுடன் காலாங்கி பாதம்போற்றி
உத்தமனே காடியது வழி சொன்னேனே.

இந்த பாடலின் விளக்கம் முன் பாடலிலேயே உள்ளது. ஆனாலும் சொல்கிறேன். இது காடி என்ற பாண்டம். இதை தினந்தோறும் ரவி முன் வைக்கும்போது சீறும் நாகத்தின் விஷத்தைப் போல் காடிக்கு காரம் ஏறி பின்புதான் இது நாதாந்த காடியாகும். வேகமுள்ள சரக்குகளுக்கு இக்காரமுள்ள காடி காலனுமாகும். வேகாத சரக்கெல்லாம் வெந்து நீறும், திருக்காலங்கி நாதரின் திருப்பாதங்களைப் போற்றி யூகமுடன் உத்தமனே ... காடிக்கு வழியை சொன்னேன்.

சொன்னதொரு காடி தன்னை யாறுதிங்கள்
துப்புரவாய் ரவிதனிலே வைக்கும்போது
நன்நயமாய் நாதங்கள் செய் பாகந்தான்
நலமான பழச்சாறு யென்னலாச்சு

வின்னமது நேராது முப்பு மார்க்கம்
விள்ளார்கள் சித்து முனி ரிஷிகளை தேவர்
பன்னவே சாத்திரத்தில் சூட்ச முப்பு
பாடவில்லை, சித்தர்களும் பாடார் தானே

ஆறு திங்களை மட்டும் பார்த்த காடியை ரவியில் வைக்கும் போதுதான் அது நாதாக்கள் செய்த பழச்சாறு ஆகும். இந்த சூட்ச மூப்புவை சாத்திரத்தில் கூட பாடவில்லை. சித்து, மூனிகள், தேவர்கள்... மேலும் சித்தர்கள், இவர்களில் இதை எந்த சாஸ்திரத்திலும் பாடவில்லை. பாடவும மாட்டார்கள்.

தானான ஆதியென்ற முப்பு தன்னை
தன்மையுள்ள பதினென்பேர் சித்துதாமும்
மானான சாஸ்திரத்தில் சூட்சமாக
மார்க்கமுடன் முடிக்கும் வகை சொல்லார் தாமும்
கோனான, குருநூலாந் சத்தகாண்டம்
கூறினேன் போகரேழாயிரத்தில்
பானான சூட்சமென்ற முப்பு தன்னை
பாருலகில் மாண்பருக்கு பாடினேனே

பதினென் சித்தர்களும் ஆதியென்ற முப்புவையும், அதன் சூட்சத்தையும் தாம் படைத்த சாஸ்திரத்தில் முப்பு முடிக்கும் வகையை சொல்லார்கள் ஏழாயிரமான இந்நூலில் நான் முப்பு முடிக்கும் சூட்சத்தை இந்த உலக மக்களுக்காக பாடியுள்ளேன்.

பாடினேன் காடியென்ற பழச்சார் சொன்னேன்
பான்மையுள்ள நாதாக்கள் மறைந்து விட்டார்
நீடியதோர் சிவமுப்பு இந்த முப்பு
நீடாழி யுலகமெலா மிதி லடக்கடம்
கூடியதோர் கருவி கரணாதியந்த





குருவான ஜெயநீர்களிதிலடக்கம்
ஆடியதோர் சரக்கு அறுபத்தி நான்கு
அப்பனே சிவமுப்புவால் மடிவு காணே

நாதாக்கள் சொன்ன காடி என்ற பழச்சாற்றை கூறிவிட்டேன். இதுதான் சிவமுப்புவும் கூட இதில் நீடாழி, அதாவது ஆழி சூழந்துள்ளது என்பதை அன்பர்கள் அறியவேண்டும்). கருவி... கரணாதி, ஆதி... அந்தம், மட்டுமல்லாமல் குருவான ஜெயநீர்களும் இதில் அடக்கமாகும். ஆகும் சரக்குகள் அறுபத்து நான்கும் இந்த சிவமுப்புவால் மடியும்.

மடியவே சரக்கு வறுபத்து நான்கும்
மார்க்கமுடன் கைபாகம் செய்பாகம்தான்
முடியுமே கைபாகம் தவறிட்டாலும்
முனையான வைத்தியத்திற்க்கிது ஆதியாகும்
அடியான காயகல்பம் இதுவேயாகும்
அப்பனே காடி என்ற பழச்சார்தானும்
நெடியான காரமது யேற்றுதற்க்கு
நேர்மையுடன் கைபாகம் சொல்லக்கேளே

இது அறுபத்து நான்கு சரக்குகளை மடிக்கும், இம்மார்க்கத்தில் கைபாகம் செய்பாகம் தவறினாலும்... இது வைத்தியத்திற்கு ஆதியாக முடியும் இந்த அடியுப்பான சிவமுப்பு ஒரு காயகல்ப மருந்துமாகும்.... ஆனாலும் இதற்கு பெயர் பழச்சாறு என்ற காடியாகும்... மேலும் இதற்கு காரம் போதாது என்று நினைத்தால் காரம் ஏற்றும் வழியை சொல்கிறேன்.

**பி.கு. :** போகர்ப்பெருமாள் இப்பகுதியில் முதலில் ஆரம்பித்த விஷயம் என்னவோ... பழச்சாறு... என்றும் காடி என்றும் தான் ஆரம்பித்தார். அவராலும் சிலவிஷயங்களை மறைக்க முடியவில்லை. உப்பு கடல் சூழ்ந்த நீராழி மண்டபம்தான் நமது மெய்ப்பொருள்

அணுமுதல் அண்டம்வரை பாயும் வீரமுள்ள அந்த உப்பு கடல் ஆழ்ந்த நீராழி மண்டபத்தை கொண்டு வந்து காடி வைக்கும் பாகப்படி காடி வைத்து அதிலுள்ள சிவஉப்பையும் அதன் வீரியத்தையும் அதிகப்படுத்தி உப்பாக்கி உப்புக்கு அப்புவை ஊட்டக்கொடுத்து, அப்புக்கு உப்பை ஊட்டக் கொடுத்து இந்த இரண்டுக்கும் சூரிய சந்திராதிகளின் சாரத்தை ஊட்டி அதிகாரமுள்ள சிவ உப்பை உருவாக்கி அந்த சிவஉப்பை இந்நீரினாலிதை சமைத்து சுன்னமாக்கி வைத்துக் கொள்வது சிவமுப்பு. இந்த சிவமுப்பூவுக்கு இதிலுள்ள சாரப்பகுதியை ஊட்டி ரவிமதி தீட்சை கொடுத்து குருஜெயநீர் எடுத்து வைப்பதே சிவமுப்பூவின் செய்முறையாகத் தெரிகிறது.

## காடி திராவகம்

சொல்லவே காடி என்ற மார்க்கந் தன்னை
தோறாமல் திராவகமாய் முடிப்பதற்கு
வெல்லவே வாலை என்ற சக்கரவாலை
வேகமுடன் தீநீராய் வாங்குவதற்கு
புல்லவே காடி என்ற மண்பாண்டத்தில்
புகழான வாலையதை மேற்பொதித்து
சில்லுடனே சீலையது வலுவாய் செய்து
தீர்கமுடன் வாலுகையா மடுப்பிலேற்றே

இது காடியை திராவகமாய் முடிக்கும் பாகமாகும் காடி என்ற மண்பாண்டம், அதை தீ நீராய் வாங்குவதற்கு வாலையதை மேற்பொதிந்து சீலை மண் வலுவாகச் செய்து தீக்கமுடன் வாலையை அடுப்பேற்று.





**பி.கு.** *மூல நூலில் கடைசிவரி வாலுகையா.. என்ற வார்த்தை வாலையதை என்ற பொருள்படவே எழுதியுள்ளேன். வாலைக்கருவிவேறு வாலுகா கருவி வேறு.. வாலுகாயந்திரத்தில் திராவகம் இறக்க முடியாது... அல்லது காடி என்ற உப்பு மண்ணை வாலைத் தாயாக்கி அதை ஒரு பாட்டலில் அடைத்து வாலுகா எந்திரத்தில் வைக்கச் சொல்கிறாரா... என்பது கேள்விக்குறியே... ஆனால் அடியேனின் கருத்து மேற்கண்ட இரண்டு செய்முறையும் சரியானதே... இந்த இரண்டு செய்முறைக்கும் இம்மருந்து ஒத்துழைக்கும்.*

ஏற்றவே தீபதூபந்தான் கொடுத்து
யெழிலான வாலை என்ற பாண்டத்திற்கு
நாற்றிசையும் குழலமைத்து சீசாவைத்து
நலமுடனே திராவகத்தை இறக்கிக் கொண்டு
மேற்புறமா ஜலமதனை தள்ளி நீக்கி
மேன்மையுடன் மறுபடியும் ஜலத்தைவாரு
ஆற்கமுடன் மறுப்படியும் குழலமைத்து
அப்பனே திராவகத்தை வாங்கிடாயே

வாலை என்ற பாண்டத்திற்கு தீப தூபம் கொடுத்து சீசாவை நாற்புறம் வைத்து அதற்கேற்ப குழலமைத்து, அதன்பிறகு திராவகத்தை இறக்கி வைத்துக்கொள். இதில் மேற்புறமுள்ள நீரை நீக்கி விட்டு அந்த திராவகத்தை மறுபடியும் முன்போலவே திராவகத்தை வாங்க வேண்டும்.

**பி.கு. :** *சீசாவை முன்வைத்து அதற்கேற்ப குழலை வைப்பதா ? இந்திராவகத்தை இறக்கிறயவருக்கு இதன் பொருள் புரியும்.*

வாங்கியே திராவகத்தை பதனம் பண்ணு

வளமான காடியென்ற பழச்சார் தன்னை

தூக்கியே திரியாதே வருண்மைந்தாகேள்
துப்புரவாய் குருமுடிக்குந்த திராவகந்தான்
ஏங்கியே திராவகத்தை முடியாமல் தான்
யெழிலா வையகத்து மாண்பரெல்லாம்
சாங்கமுடன் சாத்திரத்தை உணராமற்தான்
சட்டமுடன் பலத்துறையாய் போனார்தாமே
அருண்மைந்தா...

இதுதான் குருமுடிக்கும் திராவகம், இதுதான் காடி என்றும் பழச்சாறு என்றும் கூறுவார்கள். இதை விடுத்து எலுமிச்சை பழச்சாறு... மற்றும் தாவரவர்கத்தின் சாற்றை தூக்கிக் கொண்டு திரியாதே.

இந்த திராவகத்தை முடிக்க முடியாமல் தான் இந்த வையகத்து மாண்பர்கள் பலத்துறையை நோக்கிச் சென்ற வண்ணமுள்ளார் அவர்கள் சாத்திரத்தையும் (சூத்திரத்தையும்) உணராதவர்கள்.

தரமான வழலையது யெடுக்கும்பூமி
தாக்கான நெடுங்காசி தன்னிலப்பா
பூமான்கள் சொல்வதற்கு வளப்பஞ்சொல்வேன்
புகழான திண்டிக்கல், பீம் பாறையாகும்
நாமே தான் சொன்னப்படி திருபுவனமாகும்
நலமான யாவடியார் கோயில் தானும்
வேமேதான் விலாடபுரம் தன்னில் தானும்
மிக்கான வயநாடு பூமியாச்சே
இங்க போகப்பெருமான்

வழலையை எடுக்கும் பூமியைப் பற்றியும் வழலைக் கல்லைப் பற்றியும் குறிப்பிடுகிறார்.





"நெடுங்காசி" " திண்டிக்கல்" "திருப்புவனம்" "ஆவடியார் கோயில் "விலாடபுரம்" "வயநாடு"

ஆச்சப்பா தென்காசி பதியில் தானும்
அப்பனே கன்னியா குமரியானும்
நீச்சான வலையயலென்ற குப்பி தன்னை
நேர்மையுடன் தான்முடிக்கும் காளாஸ் திரிதானும்
மூச்சுடனே நெடுந்தூரம் சென்றாலப்பா
முனையான பாளமென்ற கோயம்புத்தூர்
வீச்சுடைய பூமியது பள்ளநாடு
வீரான கள்ளழகர் நாடுதானே.

மேலும் தென்காசி கன்னியாகுமரி காளாஸ்திரி. கோயம்புத்தூர். கள்ளழகர் நாடு, பள்ளநாடு

நாடான நர்மதா தேசமப்பா
நலமான சித்தூரஞ் சிங்கிநாடு
பாடாண்மை கொண்டதொரு சீனதேசம்
பாங்கான முப்பூவுக் கிடமேயாகும்
கோடான கோடி மனு மாண்பர்க்கெல்லாம்
கொற்றவர்க்கு யின்நாடே வஞ்சிநாடு
தாடாண்மை கொண்டதொரு தேசமப்பா
தாரணியில் பூவிழலை யெடுக்கும் நாடே

மேலும்

நர்மதா (நதியோடும் தேசம்) தேசம் சித்தூர் சிங்கிநாடு சீனதேசம் இவைகளையெல்லாம் முப்பூவுக்கு இடமாகும்

கொற்றவர்களுக்கு இந்நாடுகளே வஞ்சி நாடாகும். இவையெல்லாம் இத்தாரணியில் பூவிழலை எடுக்கும் தேசமாகும்.

எடுப்பதற்கு இந்நாடு சிந்துதேசம்
யெழிலான தேசமெல்லாம் பின்நாடாகும்
கொடுப்பதற்கு சிவயோகி மாண்பருக்கு
கோடான கோடி முறை இதிலொப்பாகும்
தடுப்பதற்கு இப்பூமி விட்டாலப்பா
தாக்கான பூமிவள தமக்குமில்லை
உடுக்கை யென்ற பிரகக்கல் தானுமப்பா
உத்தமனே யெடுக்கும்வகை செப்பினேனே

முன்சொன்ன ஊர்கள் யாவும் உடுக்கையென்ற நாதக்கல்லான பிரம்மக்கல்லை எடுப்பதற்கு உகந்த நாடாகும். மேலும் சிந்து தேசம் எடுப்பதற்கு பின்னாடாகும்.

சிவயோகிகளுக்கு கோடான கோடி முறைகள் இதற்கொப்பாகும் இந்த பூமியை விட்டால், வளமுள்ள பூமியை எடுக்க வேறில்லை தேசம்.

**பி.கு :** பிரம்மக்கல் என்பதுதான் அச்சுப் பிழையால் பிரகக்கல் என்று மாறியுள்ளது.

**பி.கு. :** இப்பாலின் கடைசிவரி பூவிழலை என்ற வார்த்தை வருகிறது... ஒரு பழமொழியுண்டு "இது விழலுக்கு இறைத்த நீராகிடக்கூடாது" ... என்பது தான் அந்த பழமொழி. போகர் பெருமான் அந்த வார்த்தையை எதன் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளார் ?

பூவழலை என்று யோசித்தால் மேற்கண்ட கருத்து ஒரு மாதிரியாகவும் பூவிழலை என்று யோசித்தால் வேறு உள் பொருளையும் கொடுக்கிறது. மேலும் இங்க வழலை எடுக்கும் நாடுகள் என்று பல தேசங்கள் குறிப்பிட்டாலும் அதன் உட்பொருள்





இதுவாகவும் இருக்கலாம். ஒரு தேசத்தையோ ஓர் ஊரையோ குறிப்பிடும் வாசகம் அல்ல. இதில் ஏதோ ஓர் சூட்சமம் உள்ளது என்பது மட்டும் இங்கு புலனாகிறது மேலும் பூநீறு எடுத்து குருமுடிப்பவர்க்கும் இது பொருந்தும் ஏனெனில் மேற்சொன்ன ஊரில் எல்லாம் பூநீறு பூக்கிறது என்பதும் உண்மையே

செப்பினேன் வழலையது யெடுப்பதற்கு
செயலான காடி முடிப்பதற்கும்
ஒப்பான முப்பூவின் மார்க்கந்தன்னை
ஒழுங்குடனே முடிப்பதற்கு வழிதான் சொன்னேன்
தப்பிதகங்களில்லாமல் குருமுடிந்தால்
தன்மையுள்ள முப்பூவும் முடியும்பாரே

இந்தப்பாடலில் ஒருவரி இல்லை
வழலையை எடுப்பதற்கும்
காடி முடிப்பதற்கும்
முப்பூமார்க்கத்தை ஒழுங்க முறைப்படி முடிக்க
வழிச்சொன்னேன்
நான் கூறியப்படி குருவை முடித்தால் (குரு முடித்தால்)
அதுவே நன்மையுள்ள முப்பூவாக முடியும்.

பாரேதான் பூநீறு சுத்திச்செய்து
பாகமுடன் எடுப்பதற்கு வகையைகேளு
நேரேதான் பூநீறு படிதானப்பா
நிலையான முன்சொன்ன காடி தானும்
சீரேதான் பூநீரில் விட்டுமைந்தா
சிரப்புடனே கலக்கியதை தெளிவித்து
கூறேதான் ரவிதனியே காயவைத்து
கொப்பெனவே யுப்பதனை யெடுத்திடாயே

இனி பூநீறை சுத்தி செய்து பின் அதை பாகப்படி எடுப்பதற்கு வகையை கேள்.

பூநீறை ஒருப்படி எடுத்து அதை முன் சொன்ன காடி நீரில் விட்டு கலக்கிட அதை தெளிவு இறுத்து ரவியில் காயவைத்து உப்பை எடுத்துக்கொள்

யெடுத்துமே இப்படியே பத்துமுறை கலக்கி
யெளிதான ரவிதனிலே காயவைத்து
கொடுத்ததொரு வுப்பதனை பதணம் பண்ணு
தோறாமல் பத்துமுறை செய்த உப்பை
கெடுத்திடா வண்ணமது பீங்கான் நன்னில்
கவனமுடன் பதனமாய் செய்துக்கொண்டு
நடுத்தெருவாங் கருமி யென்ற மாண்பருக்கு
நவிலாதே நவின்றிட்டால் சாபமாமே
முன்பாடலில் கூறியதுபோல்

காடிநீரில் பூநீறுவை கலக்கி தெளிவு எடுத்து ரவியில் காயவைத்து எடுக்க வேண்டும். (இதை தஷ தீட்சை என்பார்கள்) இப்படி பத்து முறை காய்ச்சி எடுத்து அதை கெடுத்திடாவண்ணம் ஒரு பீங்கானில் பதனம் செய்து வைக்க வேண்டும். இதை கருமிக்கும் கூறிவிடாதே நவின்றால் சாபம் வந்து சேரும்.

**பி.கு. :** உப்புக்கு அப்பை ஊட்டக்கொடுக்க உப்பும் அப்பும் கூடி ஒன்றினில் ஒன்றை ஊடுருவி அனுமயத்தில் விரவிப்பரவ ஏதுவாக அவை தன்னை அமைத்துக்கொள்ளும்.

சாபமா மின்னமொரு மார்க்கங்கேளு
தப்பாது காலாங்கி வாக்க தானும்
பாபமது நேராது புண்ணியவானே
பாருளகில் சித்து முனி சொல்லார்தாமும்





கோபமது கொண்டல்லோ முனிவர்தாமும்
கூறாதே சிவமுப்பு சூட்சந் தன்னை
தாபமுடன் மனோன்மணியாள் கடாட்சத்தாலே
சாங்கமுடன் அடியேனு நவின்றிட்டேனே

புண்ணியவானே

இந்த மார்க்கத்தின் (இரகசியங்களை) சாபத்துக்குறியதுதான். ஆனால் இது காலாங்கியின் வாக்கு இதில் பாவம் நேராது. இதை சித்து முனிகள் சொல்லமாட்டார்கள். இது சிவமுப்பு. இதை கேட்டால் கோபம் கொண்டு முனிவர்கள் (அறவாக்கு) கூறமாட்டார்கள். இதன் சூட்சமத்தையும் கூறமாட்டார்கள். ஆனால் மனோன்மணியின் கடாட்சத்தால் அடியேன் கூறுகிறேன். இட்டதொரு பிரம்மக்கல் தன்னை எடுத்து

எழிலான கருப்பதனை நீக்கி மைந்தா
தொட்டளவு குருசொன்ன வாக்கப்போலே
துறைமுகமங் கண்டறிந்து பளிங்க கல்லாய்
சட்டமுடன் கல்லதனை யிடித்துமைந்தா
சாங்கமுடன் பச்சை என்ற பூநீர் தன்னை
திட்டமுடன் கல்லுக்க ரெண்டேயாகும்
தீரமுடன்றான் கலந்து பாண்டடும்வையே

முதலில் பிரம்மக்கல்லை எடுத்து அதன் கருப்பை போக்கிவிடு. அது பார்வைக்கு பளிங்குக் கல்லாகத் தெரியும். இது குரு தொட்டுக்காட்டிச் சொன்ன வாக்குப்படியே அதை எடுக்கும் துறைச்சார்ந்த முகத்துவாரத்தையும் கண்டறிந்து அதை கொண்டு வந்து நன்கு கறைத்துக்கொள். இது பச்சையாகும், பச்சையென்ற பூநீர் ஆகும். இந்த பச்சை என்ற பூநீர் என்ற கல் என்ற அளவுக்கு இரண்டாகும் அதை கலந்து பாண்டம் வைப்பீர்.

**பி.கு.** ஆங்கில நூலில் பன்னிரு திறவுக்கோளில் ஒருவாக்கியம் வரும்

அதை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

அண்டங்காக்கையின் தலையை வெட்டி அதை வெள்ளையாக்க என்ற.. இந்த வரி இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

இந்த வெள்ளை தான் பளிங்க நிறம், இதை உப்புக்கல்லாக மாற்றும்போது தான் அது பிரம்மக்கல்லாக பளிங்கு வண்ணத்தில் காட்சியளிக்கும். இவை சமைக்கும் முறைக்கேற்ப, இது பச்சையாகவும், பூநீர் ஆகவும், கல்லுப்பாகவும், உருமாறி தென்படுகிறது.

பாண்டமது தனிலமைத்துப் பாகங்கேளீர்
பாங்காக முன்னுரைத்த காடிநீரை
வேண்டிய பூநீறுக் கரை தானப்பா
விருப்பமுடன் பாண்டமதி லூட்டுமைந்தா
தூண்டியதோர் கருமான மிரண்டும் வேக
துப்புரவாய் காடி யென்ற நீரினாலே
மாண்டிடவே தானெறிப்பாய் காடி நீர்தான்
மார்க்கமுடன் சுண்டமட்டும் மெரித்திடிடாயே

பாண்டமது தனிலமைக்கம் பாகத்தை கேளீர்

முன்னுரைத்த காடிநீர் பூநீறுக்கு அரைபாகம் பாண்டத்தில் வைத்து ஊட்டு, பூநீறு, காமநீர், இக்கருமானம் இரண்டும் வேக காடிநீர் சுண்டு மட்டும் எரித்து எடுப்பாய். கருமானம் இரண்டும் வேகவைக்க மாளும்மட்டும் காடிநீரால் எரித்தெடுப்பாய்.

எரித்துமே பச்சை என்ற காடிநீரால்
ஏற்றமுடன் தானலம்பி ரவியில் போடு
மரித்துமே பிரம்மமென்ற கல்தானப்பா
மகத்தான என்னையது கக்கிக்போச்சு
குரித்தப் பொருள் பிரம்மமென்ற சுண்ணக்கல்தான்
கூறான தேகமது லதிகங் கொண்டு
தெரிந்துமே பொடிப்பொடியாய் தகடுப்போலாம்
வெளியான சுண்ணத்துக் கிடந்தானாச்சே.





எரித்து எடுத்த பிரம்மக்கல்லை மீண்டும் காடி நீரால் அலம்பி ரவியில் போட்டு மரித்த பிரம்மக்கல் எண்ணை கக்கி விடும் (இக்கல் இனி சுண்ணத்துக்கு தயாராகிவிடும்) கூரான தேகமது அதில் அதிகம் கொண்டிருக்கும் அரைபொடிப்பொடியாக்கு. அது தகடுப்போலாகும். இப்படி பக்குவப்பட்ட பிறகுதான் இக்கல் சுண்ணத்துக்கு தயாராகிறது.

ஆச்சென்று விடுக்காதே இன்னங்கேறு
அப்பனே காலாங்கி சொன்ன நீதி
காச்சலென்ற சுண்ணமதைத் தானெடுத்த
கருவான கல்வமதிலிட்டு மைந்தா
மாச்ச லென்ற சிற்றண்ட கருதானப்பா
மகத்தான பிரம்மக்கல் சுன்னந் தன்னை
வீச்சுடனே தானறைப்பாய் மடியுமட்டும்
வீரான சுன்னமதை பில்லை செய்யே

இது காலாங்கிச் சொன்ன நீதி

ஆச்சென்று விட்டுவிடாதே. காய்ச்சி எடுத்த சுன்னத்தை எடுத்து கருவான கல்வத்தில் இட்டு அதில் சிற்றண்டக் கருவான பிரம்மக்கல் சுண்ணத்தை மடியும்மட்டும் அறைத்து வீச்சுடன் அறைந்தும் வில்லை செய்து வை.

**பி.கு. :** இந்தப்பாடல் சற்று குழப்பமும் தருவதாகத் தோன்றும் பிரம்க்கல் சுண்ணத்தை காடிநீரால் அறைந்து சுண்ணம் செய்வது மரபு.

ஊதவே சுன்னமது வாகுமாகும்
உத்தமனே மூசையது வழுகு மட்டும்
நீதமுடன் வூதிடவே சுண்ணமாகும்
நிலையான சுன்னமிது பிரம்மக்கல்லாம்

தோதமுடன் மூசைதனை யுடைத்துப்பாரு
சுந்தரனே சுன்னமது பிரம்மக்கல்லாம்
சாதமது தான் கொடுக்கும் சுக்காங்கல்லாம்

சட்டமுடன் நாதாக்கள் பெருமைப்பாரே

கைபாகத்துடன் மூசையது அழகுமட்டும் ஊதி எடுத்துப் பார்க்க பிரம்க்கல் சுண்ணமாகும். இது தான் நிலையான பிரம்மக்கல் சுண்ணமாகும். இதுவேதான் பிரம்மக்கல்லாகும். இதற்கு சாதமது தான் கொடுக்கும் சுக்காங்கல் ஆகும். இதிலிருந்து நாதாக்களின் பெருமை தெரியவில்லையா என்ன ?

பாரே தான் சுன்னமென்ற பிரம்மக்கல்லை
பாங்குடனே பீங்கானிற் பதனம் பண்ணு
நேரேதான் சரக்குக் கேரலாச்சு
நெடிதான பிரம்மக்கல்லென்ற சண்ணம்
ஆரோதான் முடிப்பார்களப்பா கேளு
ஆதி என்ற சுன்னமதை முடியாரப்பா
சீரேதான் சாத்திரத்தி னுளவாராய்ந்து
சிறப்புடனே பார்த்து வைத்த சுண்ணமாமே.

சுன்னம் என்ற பிரம்மக்கல்லை பாங்குடன் ஒரு பீங்கானில் பதனம் செய்த வைத்துக்கொள். இது சரக்குகளுக்கெல்லாம் ஏறும் இதுவே ஆதி சுண்ணம். இதை முடிப்பவர்கள் யார் ? சாத்திரங்களில் உள்ள உளவை ஆராய்ந்து அறிந்து சிறப்புடன பார்த்து வைத்த சுண்ணம் இது.

**இந்நூல்**

சித்தப்பெருமான் திருகாலாங்கி நாதரின் கருணை
வேண்டியும், அவர்மாணாக்கர் போகர் பெருமானின்
ஆசிவேண்டியும் சித்தப்பெருமக்களின் திருவடிகளை
சரணடைந்தேன் இனி யாவும தங்கள் சித்தம்.





# "வள்ளலார் அருளிய மருத்துவம்"
## ஓர் திரணாய்வு

சித்தநேசன்
வி.எஸ். லக்ஷ்மா

சித்த அன்பர்களுக்கு வணக்கம். அகத்தியர் வார்ததை ஒன்றுள்ளது.
"வாழுகின்றோம் சித்தரோடு ரிஷிகள் தாமும்
காயத்தை ஒளிபோலாக்கி கற்பூர தீபம் போலே"
என்ற இலக்கணத்திற்கிணங்க கலியுகத்தில் வாழ்ந்து காட்டியவர், வாழ்ந்து கொண்டிருப்பவர் நமது அருட்பிரகாச வள்ளலார். "வள்ளலார் தெய்வ நிலையத்தால்" வெளியிடப்பட்ட "வள்ளலார் அருளிய மருத்துவம்" என்ற தொகுப்பில் இருந்து ஒரு பகுதியை எடுத்து காட்ட விரும்புகிறேன். இங்கு நமது கருணாகர சுவாமிகளின் ஞான குரு ஆசான் என்னும் நூலில் உள்ள செய்திகளையும், மேற்குறிப்பிட்ட வள்ளலார் அவர்களின் நூலில் உள்ள செய்திகளையும் ஒப்பிட்டு ஒரு ஆராய்ச்சி கட்டுரையை எழுத விரும்புகிறேன். முதலில் வ்ள்ளலார் அருளிய மருத்துவம் என்ற நூலில் உள்ள செய்தியை உள்ளவாறு எழுதுகிறேன்.

தேகம் நீடிப்பதற்கு தீபப் பிராமணம்

| | | |
|---|---|---|
| அகல் | - | தேகம் |
| எண்ணெய் | - | இரத்தம் |
| திறி | - | சுக்கிலம் |
| பிரகாசம் | - | ஆன்மா |

ஆதலால் மேற்குறித்த தீபத்தினது திரியைத் தூண்டிவிட்டாலும், காற்றுள்ள இடத்தில் வைத்தாலும் பெருந்தீபச் சமீபத்தில் சேர்த்தாலும், வீட்டில் பிரமரம், மூஷிகம், மார்ச்சாலம் முதலிய அஜாக்கிரதையாலும், மேற்படி தீபம் நஷ்டமாகும். புத்திமானிடத்தில் தீபத்தினது உபகரணங்களைக் கொடுத்து ஒரு

நாளைக்கித்தீபம் பார்க்கச் சொன்னால் புத்தி விசாலத்தால் மேற்குறித்த அஜாக்கிரதையின்றி, தகளிக்குச் சூடேறாமலும், எண்ணெயில் அழுக்கு ஏறாமலும் வர்த்தி தூசு, இறுகல், தளர்ச்சி, பருமன் இவைகளில்லாது - சிறு திரி போட்டு அடிக்கடி தூண்டாமல் தீபத்தை மற்றொரு தினமும் இருக்கச் செய்விப்பான். மேற்குறித்த குற்றங்களோடு தீபம் ஏற்றினால் பதினைந்து வினாடி அல்லது கணம் இதில் சிட்டம் கட்டுவது இயற்கை. தூசு போக்கி வைத்தால் பதினைந்து நிமிஷத்திற்கு ஒருவிசை சிட்டங் கட்டும். விசேஷ அறிவுடையவன் "மேற்குறித்த லோகம் முதலியவற்றில் தீபம் வையாது" வைர படிகங்களில் அமைத்த தீபத்தகளியில், மேற்குறித்த தீபோ கரணங்களைத் திரவமாக்கி, சுத்தாக்கினியால் பிரகாசம் உண்டாக்குவான். அப்போது சிட்டமும் பிரகாச நஷ்டமும் நேரிடாது. ஆதலால் நம்முடைய தேகத்தில் சுக்கிலமாகிய திரியை விசேஷம் தூண்டி அடிக்கடி பெண்ணிடத்தாகிலும் வேறு தந்திரத்தாலாயினும் செலவு செய்து விட்டால் திரி போய் ஆயுளாகிய பிரகாசம் நஷ்டமாய் விடும்.

இது வள்ளல் பெருமானின் கூற்று. இதே போல் மகான் கருணாகரர் கூறுகையில் தேகத்தில் இரத்தம் சுக்கிலமாகும் சூழலில் உடல் கற்ப தேகமாகி விடும் என குறிப்பிடுகிறார். அடியேனின் குருநாதர் சில காலங்களுக்கு முன்பு தாம் அவ்வாறு இரத்தம் விந்துமயமாக்கிய ஒருவரை கண்டதாகவும், அவரது உடலை ஊசியால் குத்தியதும், வெளிர் மஞ்சள் நிறமாக இரத்தம் வெளியேறியதாகவும், அவர் கற்ப சாதகர் எனவும், அவர் ஆந்திரா மாநிலத்தை சார்ந்தவர் எனவும் கூற கேட்டிருக்கிறார். இரத்தம் விந்துமயமாகும் என்பதற்கு இது ஒரு உதாரணம். மேலும் இது போன்ற கற்பத்தை உட்கொள்ள மகான்கள் கூறுவது போல் அண்ட கற்பம் உண்ண வேண்டும். அதற்கு அண்டம் என்பது தெரிய வேண்டும். பலர் பலவாறு அண்டம் இது தான் என நினைத்து ஆராய்ச்சிகளை செய்து வருகின்றனர். அண்டம் எதுவாயினும் அதிலிருந்து உட்கொள்ளப்படும் மருந்து மேற்கூறிய விஷயத்தை





நிகழ்த்த வேண்டும். வள்ளல் பெருமானின் வாக்கிலிருந்து மேற்குறித்த லோகம் முதலியவற்றில் தீபம் வையாது என்பதிலிருந்து அண்டம் என்பம் லோகமல்ல என்பது விளக்குகிறது. மேலும் நிகழ்வை உற்று நோக்க வேண்டும். அனையா ஜோதி என கூறப்படும் வள்ளலின் ஜோதி வழிப்பாட்டை காணும் போது, ஒரு விளக்கு அது அனையாமல், அதற்கு வெளியில் இருந்து எந்த ஒரு பங்கமும் நேராமல் தடுப்பதற்கு ஒரு கண்ணாடி கூண்டு பொருத்தப்பட்டிருக்கும். இந்த கண்ணாடி கூண்டே தீபம் அனையாமல் தொடர்ந்து எரிய உதவுகிறது. இங்கு இந்த கூண்டே உடலையும், ஆன்ம ஜோதியையும் பாதுகாக்கிறது. இந்த கூண்டே கற்பமாக இருந்து உயிரை வளர்க்கிறது. இவையனைத்தும் அடியேனின் கருத்துகளும், எண்ணங்களுமே. இந்த எண்ணங்கள் அனைத்தும் ஆய்வுக்குரியவையன்று முடிவல்ல. எனவே உற்றதை ஏற்று அற்றதை தள்ளுங்கள் அவ்வளவே. இந்த கட்டுரையை மகான்கள், கற்ப சாதனையாளர்கள், சித்தர்கள் யாரேனும் படிக்க நேரலாம். அவர்கள் கட்டுரையில் தவறு இருப்பின் "சுட்டிக்காட்டாத வித்தை சுட்டு போட்டாலும் வராது" என்பது பழமொழி. மேலும் அடியேனும் மெய்ஞான பதிப்பக பட்டறையில் பட்டை தீட்டப்பட்டு கொண்டிருப்பவன் என்பதை பெருமையுடன் கூற விரும்புகிறேன்.

# அண்டக் கல்லும் ஆர்காணங்களும்

M.சிவக்குமார் M.Sc.

"அண்டக்கல்" என்று தமிழக சித்தர்களால் அழைக்கப் பொருளானது. மாபெரும் வல்லமை பெற்றதாகவும், அணுவியல் சக்திகளை உள்ளடக்கிய பொருள் என்றும் குறிப்பிட்டாலும், அண்டக்கல்லின் தோற்றம் குறித்தான தகவல்கள் யாவுமே பரிபாஷைகளால் கூறப்பட்டவைகளாகவே உள்ளன. எனவே அண்டக்கல் என்பது பூமிக்கடியில் விளையும் ஒரு வகை கால்சிய, மெக்னீசிய வகை கல்லென்று பலரும் அதனை எடுத்து ஆய்வுகள் செய்கின்றனர். சித்தர் பாடல்களில் பூமிக்கடியில் பதினெட்டு அடி ஆழத்தினில் உள்ளது என்று கூறப்பட்டது பரிபாஷையே. எனவே அகத்திய சித்தர் சுண்ணாம்பு கூட்டம் தள்ளே1 என்று கூறுவதை சிந்திக்க வேண்டுகிறேன். மேலை நாட்டு சித்தர் நூல்களில் நான்கு வித ஆர்கானங்கள் பற்றிய தகவல்களை படித்தால் அண்டக்கல் என்பது பூமியில் விளையும் சுண்ணாம்புக்கல் அல்ல என்பது விளங்கும். மேலும் அண்டக்கல்லை அறிய வேண்டுமாயின் அமுத கலசத்தை (இயற்கை) உணர வேண்டும். எனவே அமுத கலசமே தேடப்பட வேண்டிய பொருள் என்றும் அண்டக்கல் உருவாக்கப்பட வேண்டிய பொருள் என்றும் பகுத்து உணர வேண்டும்.

வாயு, வன்னி, வருண பூதங்கள் மூன்றும் முறையே பிரிக்கப்பட்டு, பின்னர் முறைப்படி சேர்க்கப்பட்ட பொருளே





சுண்ணாம்புக்கல், அண்டக்கல், அமுதம், வாசி என்று பல பெயர்கள் உண்டு. தன்னகத்தே அக்கினி தன்மை கொண்ட அண்டக்கல் அதன் ஜலம் ஆகியவற்றை உறவாக்கி உண்பதே கற்பம் என்றும், வாசி என்றும் கூறுவர்.

முப்பூதம் கண்டுண்டதே சுண்ணம், வாசி என்று மகான் கருணாகரர் கூறுவதை நினைவிற் கொள்ள வேண்டும்.

அண்டக்கல்லின் உருவாக்கம் பற்றிய தகவல்கள் தமிழில் பரிபாஷையாக கூறப்படுவதனால், மூலப்பொருளாகிய கலசத்தை என்ன செய்ய வேண்டும் என்பதனை மேலைநாட்டு சித்தரின் நூலான ஆறு சாவிகள் என்ற நூலினில் தெளிவு படக்காணலாம். முதல் மூன்று சாவிகளின் செயல் முறைகளின் முடிவில் அண்டக்கல்லை அடைந்து விடலாம்.

எனினும் "ஆறு சாவிகள்" (SIX KEYS) என்ற நூல் மேலை நாட்டு இயற்கை தத்துவம் அடிப்படையில் எழுதப்பட்டதே1 எனவே இயற்கை மற்றும் தோற்றங்களின், தத்துவ அறிவினைப் பெற்றவர்களால் மட்டுமே அதனைப் புரிந்து கொள்ள முடியும். இரசவாதத்தின் ஆதியந்தத்தை தெளிவாக ஆதாரப் பூர்வமாக கூறும் ஒரே நூல் அது. மேலும் செயல்முறை சிக்கல்களையும் விளக்குகிறது. இந்நூல் ஆசிரியர் யூடாக்ஸ் ஆவார்.

எனவே சித்தர்கள் குறிப்பிடும் இயற்கை என்பது என்னவென்று தெளிவுபட உணராமல் அண்டக்கல்லை அடைய முடியாது. பேசில் வேலண்டைன், பாராசெல்சஸ் போன்றோர்களின் நூல்களும் "இயற்கை" என்னவென்று உணர்த்துகிறது. ஜோகோப் பொகியும் இயற்கையின் தோற்றம்,

வடிவம், வண்ணம் போன்றவற்றை கூறியுள்ளார்.

நால்வித ஆர்கானங்கள் மேலை நாட்டு சித்தர்களால் கூறப்பட்டவைகளுள் ஒன்று தான் அண்டக்கல். அவைகள் முறையே பிரைமா மெட்டியா, பிளாசபர் ஸ்டோன், மெர்குரி, டிஞ்சர் என்பனவாம். இதில் குறிப்பிடப்படும் பிளாசபர் ஸ்டோன் என்ற முப்பூத கூட்டுப் பொருளையே நம் நாட்டு ஞானிகள் அண்டக்கல் என்றனர்.

நாம் நமது அன்றாட வாழ்வினில் காணும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களுக்கும் சித்தர்கள் குறிப்பிடும் பஞ்ச பூதங்களுக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை. சித்தர்களின் சிற்றுலகில் நாம் கண்ணில் காணும் பருப்பொருள் நிலையில் உள்ள பஞ்ச பூதங்களாக செயல்படும் ஆற்றலுடன் ஐந்து பொருள்கள் விளங்குகின்றன. அதனால் அவற்றை சித்தர் உலகின் பஞ்ச பூதப்பொருள்களாக ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

இதில் குறிப்பிடப்படும் பிளாசபர் ஸ்டோன் என்ற இரண்டாவது ஆர்கானத்தை தமிழ் மரபு சித்தர்கள் கடல் நுரை என்றும், இராமேஸ்வரக்கல் என்றும் கூறுவர். இந்த கல்லினைக் கொண்டு பாதரசத்தை உலோகமாக்கிட முடியும்.

இதனைக் கொண்டு சிவலிங்கம் செய்து வழிபட்ட சித்தர்களும் உண்டு. இதனை சாமானிய மக்களே கூட செய்யலாம் என்று நீதிபதி ஐயா. திரு. பலராமையா குறிப்பிட்டதினை நீங்கள் படித்திருப்பீர்கள். இனி வரும்1 கட்டுரைகளில் ஆர்கானங்களைப் பற்றிய செய்திகளை விரிவாக எழுத உள்ளேன்.





இக்கட்டுரையில் இரத்தினச் சுருக்கமாக ஆர்கானங்களின் தன்மைகளை கூறி முடித்துக் கொள்கிறேன்.

பிரைமா மெட்டீயா : முதலாவது ஆர்கானம். இது ஈயத்தைப் போன்ற தோற்றம் உடையது. இதனை எவ்வாறு செய்வது என்பதனை ஹெர்மட்டிக் ரைட்டிங்ஸ், ஆப் பாரா செல்சஸ் என்ற நூலில் காணலாம். பல மருத்துவ குணங்களைக் கொண்டது. நீர்த்தன்மையுடன் கூடிய நிலமாக காட்சி தருவது ஞானிகளின் தங்கம் இது தான்.

பிளாசபர் ஸ்டோன் : இது ஒளி தரும் கல் வடிவில் பல்வேறு வித வண்ணப் புள்ளிகளுடன் காணப்படும். இதில் இரு விதமான இரங்கள் உண்டு. காய சித்தியை தரும். யோக ஞானம் உண்டாகும். பாதரசத்தைக் கட்டக் கூடியது.

மெர்குரி : இது ஒளி பொருந்திய கல்லாகும். உலோகங்களை மாற்றுயர்வு கொண்டதாக மாற்ற வல்லது. இதில் ஒளித்தன்மை மிகுந்து காணப்படும் போது அதனை சந்தரநீர் என்பர். இது ஒரு வெண்ணிறமான திராவகம்.

டிஞ்சர் : இது மாணிக்க நிறம் கொண்டது. அனைத்து வல்லமைகளையும் கொண்ட காயசித்தி நல்குவது. இது செந்நிறக்கல். இதன் செய்முறையினை பாரா செல்சஸ் நூலில் காணலாம். பாதரசத்தை தங்கமாக்க வல்லது.

நன்றி.